பிரளிமாந்த தைலம்

(சித்தர்)

(இது ஏறண்டத்தெண்ணையில் தயாரித்தது.)

It is prepared out of Avari Skin, pungai, Erandaththenai.

குழந்தைகளுக்கு உண்டாகும் பிரளி, மாந்தம் பேதியானது மஞ்சள் நிறமாகவும், பல நிறத்திலும், மாவு கரைத்தாற் போலவும், தேங்காய் பூ போலவும் வயிறு நெளிந்து நெளிந்து அடிக்கடி கொட்டாவி (ஏப்பம்) விடுதலும், வயிற்றில் பந்து போல் உருண்டு புரண்டு வருவதும் இருந்தால் இவைகளுக்கு இத்தைலம் உபயோகிக்கவும்.

அளவு - பிறந்தது முதல்

	1 மாதம் வரை	8 சொட்டு
1 மாதம்	2 மாதம் வரை	12 சொட்டு
2 மாதம்	3 மாதம் வரை	12 சொட்டு
3 மாதம்	4 மாதம் வரை	15 சொட்டு
6 மாதம்	12 மாதம் வரை	25 சொட்டு

மேல் காணும் அளவு பிரகாரம் பிள்ளைப் பாலிலோ, வென்னீரிலோ கொடுக்கவும். பேதி அதிகமாக போக வேண்டும் என்றும் இருந்தால் மேல்காணும் அளவை விட கூடுதல் ஒரு பங்கு கொடுக்கவும். குழந்தையின் தாய் மந்தமான ஆகாரமோ புளிப்பான ஆகாரமோ சாப்பிடக்கூடாது. பேதி அதிகமாகப் போனால் கீழ்காணும் மருந்துகளை கஷாயத்தில் போட்டு கொடுக்கவும்.

தினமும் 2 கிராம் மஞ்சள், 2 கிராம் வேப்பிலை நெட்டு, மாவிலை நெட்டு, பிலாவிலை நெட்டு, வெற்றிலை நெட்டு முருங்கை இலை நெட்டு, கறிவேப்பிலை நெட்டு வகைக்கு எண்ணம் 5 வீதம் இவைகளை சிவக்க வறுத்து கால் லிட்டர் தண்ணீரில் கஷாயம் வைத்து 2 சங்காக வற்ற வைத்து காலை மாலை ஒரு சங்கு கஷாயத்தில் தைலம் சேர்த்து கொடுக்கவும்.

M. கோபாலன் ஆசான்

22/12-129, சகோதரர் தெரு,

ராமவர்மபுரம், நாகர்கோவில்.